**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.11/2024

பெயர்:– வேலுச்சாமி நாள்:01.09.2025

பி.வா.சா. 2 ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

நான் 3ம் பிரதிவாதி கண்ணம்மாளின் சகோதரன் என்றால் சரிதான். கண்ணம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் மகன் சண்முகம் இறந்த வருடம் ஞாபகம் இல்லை. வாதி மகள் ஆவார். யார் மூத்தவர் என்றால் வாதி ஜோதிமணிதான் மூத்தவர். கரூர் மாவட்டம், புகழூர் தாலுக்கா, தொப்பம்பட்டி எனக்கு சொந்த ஊர். 3ம் பிரதிவாதி கண்ணம்மாள் எனக்கு அக்கா. தொப்பம்பட்டி வாதியின் ஊரில் இருந்து 2 கி.மீ தூரம் இருக்கும் என்றால் இருக்கும். என் அக்காவிற்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. என் அக்காவிற்கும் எனக்கும் இடையில் தற்சமயம் போக்குவரத்து இல்லை என்றால் ஆமாம். என் அக்கா மகள் ஒரு காண்ட்ராக்ட் கம்பெனியில் வேலை செய்தவருடம் காதல் திருமணம், கலப்பு திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். ஜோதிமணியின் கணவர் நொய்யல் ஆற்றில் பாலம் கட்டும் வேலையை பார்த்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த வகையில் ஜோதிமணியுடன் பழக்கம் ஏற்பட்டது என்றால் பழக்கமானது எனக்கு தெரியாது, ஆனால் திருமணம் செய்து கொண்டதாக சொன்னார்கள். அவர்கள் இருவரும் ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டார்களா என்றால் வீட்டைவிட்டு சென்று தன்னிச்சையாக திருமணம் செய்து கொண்டது எனக்கு தெரியும்.



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:10:04 +0200

திருமணத்திற்கு என்னை அழைக்கவில்லை. திருமணத்திற்கு அவருடைய அப்பா, அம்மா சென்றார்களா என்றால் தெரியாது. அவர்கள் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்து இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார், யாருக்கு எவ்வளவு பாத்தியம் இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஜோதிமணியின் தாத்தா, பாட்டி பெயர் தெரியுமா என்றால் மாரப்பன், மலையம்மாள் என்று தெரியும். அவர்களுடன் எனக்கு அதிகமாக தொடர்பில்லை. அவர்களுக்கு என்ன வயது இருந்தது, இறக்கும்போது என்ன வயது என்று எனக்கு தெரியாது. அவர்கள் படிக்க தெரிந்தவர்களா, படிக்க தெரியாதவர்களா என்றால் தெரியாது. கையெழுத்து போடுவார்களா, ரேகை வைப்பார்களா என்றால் தெரியாது. அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியுமா என்றால் 3 குழந்தைகள். என் அக்கா கணவர் சாமியப்பன், மற்றொருவர் தங்கவேல், பழனியம்மாள். பழனியம்மாளை நான் பார்த்துள்ளேன். பழனியம்மாளை நான் எப்போது பார்த்தேன் என்றால் என்னுடைய அக்கா கல்யாணத்தின் போது பார்த்தேன். வாதி திருமணத்திற்கு பின்னர் எனது அக்காவிற்கும், அக்கா குடும்பாத்தாருக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. எந்த நல்லது, கெட்டதற்கும் போவதில்லை என்றால் ஆமாம். 20.03.2002ம் தேதி அன்று வாதி பெங்களூருவிற்கு ஓடிப்போய் திருமணம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. நான் சாட்சி போட்டதாக கூறியுள்ளேன் என்னென்ன பத்திரத்தில் போட்டுள்ளேன் என்றால் மாரப்பன் எழுதி வைத்திருந்த உயிலில் கையொப்பம் போட்டேன். அந்த தேதி என்ன என்றால் 05.07.2002 ஆகும். வாதி திருமணம் செய்த 4 மாதங்களுக்கு பிறகா என்றால் எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்று



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:10:11 +0200

தெரியாது. உயில் எழுதிய தேதியில் வாதி வீட்டில் இருந்தாரா என்றால் தெரியாது. வேறு என்ன பத்திரம் எழுதப்பட்டது என்றால் 05.07.2002ல் மலையம்மாளும், மாரப்பனும் பேரன் சண்முகத்திற்கு எழுதி வைத்தார்கள். என்ன எழுதி வைத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னை சாட்சி போட வேண்டும் என்று சண்முகம் அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். நான் சாட்சி போட்ட அனைத்து ஆவணங்களும் 05.07.2002ல் ஒரே நாளில் தயாரிக்கப்பட்டதா என்றால் ஆமாம். பதிவு செய்த அன்று நான் மீண்டும் போனேனா என்றால் இல்லை. நான் அந்த உயில் சாசணத்தை படித்து பார்க்கவில்லை என்றால் நான் படித்து பார்க்கவில்லை. எந்த ஆவண எழுத்தர் எழுதினார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். நான் போவதற்கு முன்பே மலையம்மாள், மாரப்பன் கையொப்பம் செய்து வைத்திருந்தார்களா என்றால் அவர்களும் அப்போதுதான் போட்டார்கள், நானும் அப்போதுதான் போட்டேன். ஒரே சமயத்தில் போட்டோமா என்றால் ஆமாம். அந்த பத்திரம் எழுதியவர் அலுவலகம் எங்குள்ளது என்றால் பதிவு அலுவலகத்திற்கு எதிர்த்தாற் போல் உள்ளது. எத்தனை ரூபாய் முத்திரைதாளில் உயில் சாசனம் எழுதப்பட்டது என்றால் முத்திரை தாள் எழுதப்பட்டது, எவ்வளவு ரூபாய் என்று எனக்கு தெரியாது. சாமியப்பன் உயில் எழுதும்போது உடன் இருந்தாரா என்றால் இருந்தார். ஒரே நாளில் இத்தனை உயில் எழுத வேண்டிய அவசியம் என்ன என்று நான் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. எந்த அடிப்படை ஆவணங்களை வைத்து இந்த உயில் தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்திரை



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.01 18:10:18 +0200

தாளை ஏற்கனவே வாங்கிவைத்திருந்தார்களா அல்லது அன்றுதான் வாங்கினார்களா என்று எனக்குதெரியாது என்றால் சரிதான். பத்திரம் கையால் எழுதப்பட்டதா, டைப் செய்யப்பட்டதா என்றால் டைப் செய்யப்பட்டிருந்தது. டைப் அடித்த விவரம் நான் கையொப்பம் செய்தபோது பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். ஒவ்வொரு உயில் சாசனமும் எத்தனை பக்கம் என்று எனக்கு தெரியுமா என்றால் ஒவ்வொரு உயில் சாசனமும் 8 பேப்பரில் எழுதப்பட்டது. மாரப்ப கவுண்டர் உயில் சாசனத்தில் என்ன வயது குறிப்பிட்டிருந்தார் என்றால் தெரியாது. அவருக்கு அப்போது 90 வயது இருக்குமா என்றால் சுமாராக 85 வயது இருக்கலாம். மலையம்மாள் அவரது கணவர் மாரப்பனை விட மூத்தவர் என்றால் எனக்கு தெரியாது. மலையம்மாள், மாரப்பனின் வயதை ஒத்தவர் என்றால் சரிதான். உயிலில் யார், யாருக்கு என்னென்ன சம்பந்தப்பட்டது என்ற விவரங்கள் எழுதப்பட்டிருந்ததா என்றால் தன்னுடைய சொத்தை பேரனுக்கு எழுதி வைத்தார் என்ற விவரம் மட்டும்தான் எனக்கு தெரியும். 05.07.2002ல் மூன்று ஆவணங்கள் எழுதப்பட்டது, ஒவ்வொரு ஆவணத்திலும் நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒவ்வொரு ஆவணத்திலும் ஒரு கையொப்பம் செய்தேன். பின்னிட்டு மூன்று உயில் சாசனங்களும் பதிவு செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயில் சாசனத்தில் டைப் செய்தவர் யார் என்ற விவரம் எழுதப்பட்டிருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த 3 உயில் சாசனத்திலும் மற்றொரு சாட்சி யார் என்றால் ஒரு உயிலில் கருப்பையன் போட்டார். மற்றொரு உயில் சாசனத்தில் சாமியப்பனின் நண்பர் விஸ்வநாதன் சாட்சி கையொப்பம் செய்தார். இன்னொரு உயில்



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.01 18:10:24 +0200

சாசனத்தில் மற்றொரு சாட்சி பள்ளக்காட்டூர் முருகேசன் போட்டார். கருப்பையன் என்பவர் வெள்ளியம்பாளையம் ஆவார். அந்த மூவரும் சாமியப்பனின் நெருங்கிய உறவினர்கள், பங்காளி முறையாவார்கள் என்றால் சரிதான். வாதியின் குடும்பம் கொங்கு வேளாளர் சமூதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கொங்கு வேளாளர் சமூதாயத்தை சேர்ந்தவர்கள்தான் கிராமத்தில் பெருங்குடிகள் என்றால் சரிதான். கொங்கு வேளாளர் சமூதாயத்தை சேர்ந்தவர்கள்தான் கிராமத்தில் அதிகமாக இருப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறான பெருங்குடிகள் சமூதாயத்தில் ஒரு பெண் கலப்பு திருமணம் செய்வது கிடையாது என்றால் சரியல்ல. கலப்பு திருமணம் என்பது கொங்குவேளாளர் சமுதாயத்தில் 2002ம் வருடம் சமயத்தில் சாதாரணமாக நடந்ததா என்றால் தெரியாது. கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களிடம் சொத்தில் இருந்து விடுதலை எழுதி வாங்குவார்கள் அல்லது அவர்களுக்கு சொத்து கிடைக்காமல் செய்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதி வீட்டை விட்டு ஓடிச்சென்று திருமணம் செய்த விவரம் பற்றி தெரிந்து நாங்கள் சாமியப்பன் பங்காளிகள் சேர்ந்து வாதிக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்று ஒரேநாளில் பல்வேறு ஆவணங்கள் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. மாரப்பன், மலையம்மாள் மிகவும் வயதானவர்கள், அவர்கள் இஷ்டப்பட்டு இந்த ஆவணங்களை எழுதி வைக்கவில்லை என்றாலும், கேட்ட இடத்தில் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் தவறு. அவர்கள்தான் எழுதி வைத்தார்கள். உயில் சாசனம் எழுதிய தேதியில் சாமியப்பனுக்கும், அவரது அப்பா, அம்மாவிற்கும் மனவருத்தம் இல்லை என்றால் சரிதான். மாரப்ப கவுண்டருக்கும், மலையம்மாளுக்கும் அந்த தேதியில் சாமியப்பன் மட்டும்தான்



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.01 18:10:31 +0200

சட்டப்படியாக சொத்துக்கு உரிமையான வாரிசு என்றால் சரிதான். ஒரே மகன் வாரிசுதாரர் இருக்கும்போது அந்த சொத்தை பேரன் பேருக்கு மாற்றி எழுத வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றாலும், வாதிக்கு சொத்து சேரக்கூடாது என்று நாங்கள் ஒன்று சேர்ந்து ஆவணங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் இல்லை. அவர்கள் சொத்தை அவர்கள் எழுதி வைத்தார்கள். சாமியப்பன் எழுதிய உயிலிலும் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மற்றொரு சாட்சி விஸ்வாநாதன் எந்த ஊர் என்றால் சாலைப்புதூர். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். 3 உயில் சாசனங்களும் ஒரு பத்திர எழுத்தர் தான் எழுதினார் என்றால் இல்லை. இரண்டுபேர் எழுதினார்கள். யார், யார் எந்த பத்திரத்தை எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்டில் சாட்சி போட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். அது எந்த தேதியில் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் 2011ம்வருடம் எழுதப்பட்டது. அது யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்றால் நான் ஒரு சாட்சி. மற்றொருவர் மலையப்பன். அது என்ன தேதியில் தயாரிக்கப்பட்டது, முத்திரைதாள்கள் எப்போது வாங்கி வைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முத்திரைதாளில் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். எவ்வளவு ரூபாய் முத்திரைதாள் வாங்கப்பட்டது என்றால் தெரியாது. முத்திரைதாள் வாங்க, பத்திரம் எழுத, பதிவு செய்ய சண்முகம்தான் செலவு செய்தாரா என்றால் ஆமாம். பதிவு கட்டணம் எவ்வளவு கட்டினார்கள் என்றால் எனக்கு தெரியாது. தான செட்டில்மெண்டில் எழுதி வைப்பவர் மட்டும்தான் கையொப்பம் செய்வார் என்றால்



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.01 18:10:38 +0200

## Copy of Deposition

சரிதான். மேற்படி தான செட்டில்மெண்டை யார் எழுதி வைத்தார் என்றால் சண்முகம் எழுதி வைத்தார். யார் பெயருக்கு எழுதி வைத்தார் என்றால் மனைவி நதியா பெயருக்கு எழுதி வைத்தார். சண்முகம் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை தவிர வேறு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை. எனது சகோதரியின் மாமனார் மாரப்ப கவுண்டர் 02.07.2009ல் இறந்தார் என்றால் வருடம், தேதி ஞாபகம் இல்லை. வாதியின் திருமணத்திற்கு பிறகுதான் இறந்தார். சாமியப்பன் இறந்தது எப்போது என்றால் 2006ம் வருடத்தில் இறந்தார். சாமியப்பன் இறப்பதற்கு முன்பே மாரப்ப கவுண்டர் இறந்துவிட்டாரா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. என் அக்கா பையன் சண்முகம் இறந்த வருடம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மலையம்மாள் இறந்ததும் ஞாபகம் இல்லை என்றால் சரிதான். யார் முதலில் இறந்தார்கள், யார் பின்னிட்டு இறந்தார்கள் என்ற விவரம் என்னால் கூறமுடியுமா என்றால் கூற முடியாது. சொத்துக்கள் பரம்பரை சொத்துக்களா என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் ஆமாம். அந்த அழைப்பாணையை நான் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வரவில்லை. சாட்சி சம்மனில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல வருமாறு அழைக்கப்பட்டிருந்தேன். நீதிமன்ற சம்மனை நான் படித்து பார்க்கவில்லை. விஸ்வநாதன் தவிர மற்ற சாட்சிகள் உயிருடன் உள்ளார்கள். இன்று சாட்சியம் அளிப்பதற்கு வந்திருக்கும் மற்றொரு சாட்சி யார் என்றால் கருப்பையன் வந்துள்ளார். அவருடன் நான் சாட்சியம் அளிப்பது பொருத்து கலந்து பேசினேனா என்றால்



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.09.01 18:10:44 +0200

**Copy of Deposition**

பேசினேன். ஆவணங்கள் அனைத்தும் உண்மையானவை அல்ல என்றாலும், முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் விருப்பப்பட்டு எழுதப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றாலும், நாங்கள் அனைவரும்சேர்ந்து வாதியின் உரிமையை முறியடிப்பதற்காக மோசடியாக தயார் செய்துள்ள ஆவணங்கள் என்று சொன்னால் அப்படியில்லை.

**2ம் பிரதிவாதி வாதியின் குறுக்கு விசாரணையை தனதாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை :–இல்லை**

| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI<br>Digitally signed by P SRIDEVI<br>Date: 2025.09.01 18:10:54 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |